தினமணி

# பூஞ்சானக்கொல்லி மருந்து தயாரிக்கும் பண்ணை மகளிர்

First Published : 19 Oct 2010 12:00:00 AM IST



பூஞ்சானக்கொல்லி மருந்து தயாரிக்கும் பண்ணை மகளிர்.

சிதம்பரம், அக். 18: சிதம்பரம் அருகே பண்ணை மகளிர் சுய உதவிக் குழுவினர் புதிய முயற்சியாக வேளாண் பாசனத்துக்காக உயிர் பூஞ்சானக்கொல்லி மருந்துகள் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

÷மகளிர் சுய உதவிக் குழுவினர் சோப்பு, மெழுகுவர்த்தி, துணிமணிகள் உள்ளிட்ட பொருள்கள் தயாரித்து வருகின்றனர். இந்நிலையில் சிதம்பரத்தை அடுத்த தில்லைவிடங்கன் கிராமத்தில் டான்வா பண்ணை மகளிர் சுய உதவிக் குழுவினர் சற்று வித்தியாசமாக விவசாயத்தை பாதுகாக்கும் வகையில் உயிர் பூஞ்சானக்கொல்லி மருந்துகளை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

÷குறிப்பாக மண்ணுக்கும், மனிதர்களுக்கும் தீங்கு விளைவிக்காத வகையில் சூடோமோனாஸ் புளூரன்ஸ் மற்றும் ரைக்கோடெர்மா விரிடி மருந்துகளை தயாரித்து வேளாண்துறை உதவியுடன் விற்பனை செய்து வருகின்றனர்.

÷இந்த பூச்சி மருந்துகள் தயாரிக்க கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் மகளிர் சுய உதவிக் குழுத் தலைவர் வனஜா, பொருளர் லட்சுமி ஆகியோர் சிறப்பு பயிற்சி பெற்று வந்துள்ளனர்.இங்கு உற்பத்தி செய்யப்படும் பூஞ்சானக்கொல்லி மருந்து கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்யப்பட்டு தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது.

÷தமிழகத்திலேயே முதல்முதலாக பண்ணை மகளிர் ரூ. 2.50 லட்சம் செலவில் மூலப்பொருள்கள் மற்றும் இயந்திரங்களை சென்னையில் கொள்முதல் செய்து தில்லைவிடங்கனில் ஒரு வீட்டில் ஆய்வுக்கூடம் அமைத்து உற்பத்தி செய்து வருகின்றனர். ÷இந்த குழுவினருக்கு பரங்கிப்பேட்டை ஒன்றிய வேளாண் துறை ரூ. 1.25 லட்சம் மானியம் வழங்கியுள்ளது.

÷இந்த பூஞ்சானக்கொல்லி மருந்துகளால் நெல், வாழை, பருத்தி, கரும்பு, மணிலா, உளுந்து, பயிர், கேழ்வரகு, கம்பு, சோளம், தக்காளி, வெண்டை, உருளை மற்றும் தென்னை உள்ளிட்ட பயிர் வகைகளை நோய் தாக்குதலில் இருந்து கட்டுப்படுத்த முடியும் என தெரிவிக்கின்றனர் பூஞ்சானக்கொல்லி மருந்து தயாரிக்கும் பண்ணை மகளிர்.

÷மேலும் இந்த மருந்துடன் கலந்து விதை நேர்த்தி செய்வதால் அமோக விளைச்சல் கிடைப்பதால் விவசாயிகளிடையே இந்த பூஞ்சானக்கொல்லி மருந்துகள் அமோக வரவேற்பை பெற்றுள்ளது.

**பயிர் காப்பீட்டுத் தொகை வழங்க வலியுறுத்தல்**

First Published : 18 Oct 2010 11:26:33 AM IST

Last Updated : 18 Oct 2010 12:33:43 PM IST

அறந்தாங்கி, அக். 17: அறந்தாங்கி பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு முறையான பயிர் காப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என பாஜக வலியுறுத்தியுள்ளது.

அறந்தாங்கி அருகேயுள்ள துரையரசபுரத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாஜகவின் தொகுதி கலந்தாய்வுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

அறந்தாங்கி பகுதிகளில் உள்ள உர விற்பனை நிலையங்களில் உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் தட்டுப்பாடின்றி கிடைக்க அரசு வழிவகை செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு முறையான பயிர் காப்பீட்டு இழப்புத் தொகை வழங்க வேண்டும். பூவைமாநகர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி வேலி அமைக்க வேண்டும்.

அறந்தாங்கியிலிருந்து மீமிசல், ஆவுடையார்கோவில் முதல் மணமேல்குடி வழியாக பெருமருதூர் வரை உள்ள சாலைகளை செப்பனிட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு பாஜக பொதுக் குழு உறுப்பினர் கே. சபாபதி தலைமை வகித்தார். ஒன்றியத் தலைவர்கள் அறந்தாங்கி பூவை. ஜெகநாதன், ஆவுடையார்கோவில் ஜி. ஆத்மநாதன், மணமேல்குடி கே. பாலசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கட்சியின் கோட்ட இணை அமைப்புச் செயலர் இராம. தாமரைச்செல்வன், மாநில செயற்குழு உறுப்பினர் சுப. செல்வக்குமார், மாவட்டத் தலைவர் பழ. செல்வம், நிர்வாகிகள்

எஸ்.பி.என். ஐயப்பன், வி. ராமதாஸ், ஆர். நாகராஜன், ஏ.ஆர். ராசு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**"|1.16 லட்சம் ஹெக்டேர் சம்பா சாகுபடி இலக்கு'**

First Published : 18 Oct 2010 11:38:49 AM IST

திருக்காட்டுப்பள்ளி, அக். 17: தஞ்சாவூர் மாவட்டத்தில் நிகழாண்டில் 1.16 லட்சம் ஹெக்டேரில் சம்பா நெல் சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் தஞ்சாவூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் பி. லோகநாதன்.

பூதலூரில் விவசாயிகளுக்கு அண்மையில் நடைபெற்ற பயிற்சி முகாமில் மேலும் அவர் பேசியது:

இலக்கில், சுமார் 85 ஆயிரம் ஹெக்டேரிலான ராஜராஜன் 1000 (செம்மை நெல் சாகுபடி முறை) சாகுபடி முறையும் அடங்கும்.

சாதாண சாகுபடியை விட ராஜராஜன் 1000 சாகுபடி முறையில் கூடுதலாக ஏக்கருக்கு சுமார் 15 }20 மூட்டைகள் வரை கிடைக்கும். ஆகவே, விவசாயிகள் இம்முறையைப் பின்பற்ற வேண்டும். மேலும் தகவலறிய, வேளாண் அலுவலர்களை அணுகலாம்.

பூதலூர் ஒன்றியத்தில் சுமார் 1,200 ஹெக்டேரில் சம்பா சாகுபடியும், 400 ஹெக்டேரில் ராஜராஜன் சாகுபடி முறையும் நடைபெற உள்ளது என்றார் அவர்.

வேளாண் அலுவலர் ஆர். முருகவேல், துணை வேளாண் அலுவலர் கே. காமராஜ், உதவி அலுவலர்கள் வி. ஜோசப் ஹிலாரி, ஜி. கோபிநாதன், வி. உமாபிரியா, டி. வசந்த், ஆர். பெரியராஜ், எஸ். கவிதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

***சாம்பார் காய் விலை வீழ்ச்சி***

First Published : 18 Oct 2010 01:04:20 PM IST

தருமபுரி, அக். 17: அதிக விளைச்சல் காரணமாக, சாம்பார் காய்களின் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

குறைந்த அளவு தண்ணீர், குறைந்த அளவு பராமரிப்பு காரணமாக இக்காய்கள் தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு, பாப்பாரப்பட்டி, காரிமங்கலம், பென்னாகரம் உள்ளிட்ட இடங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிரிடப்பட்டு வருகின்றன.

இவை மூன்று மாத பயிர் என்பதால், விவசாயிகள் இதனை அதிக அளவில் பயிரிடுகின்றனர்.

கடந்த ஆண்டைக் காட்டிலும், இந்த ஆண்டு அதிகப்படியான சாம்பார் காய்கள் விளைந்துள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இதனால், கடந்த ஆண்டு ஒரு டன் |6 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, ஒரு டன் |3 ஆயிரம் வரையிலே விலை போகிறது. இதனால், நஷ்டம் அடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியது:

தருமபுரி மாவட்டத்தில் இதைப் பயன்படுத்துவோர் குறைவு. அதனால் மற்ற மாவட்டங்களுக்கும், கர்நாடக மாநிலத்துக்கும் லாரிகளில் அனுப்பப்படுகிறது.

உற்பத்தி செலவு கூட கிடைக்கவில்லை. இதனால் மேற்கொண்டு லாரி வாடகையும் கொடுக்க வேண்டியுள்ளது என்றனர்.

**எண்ணெய்ப் பனை சாகுபடி திட்டத்தில் விவசாயிகள் பயன்பெறலாம்**

First Published : 18 Oct 2010 10:41:13 AM IST

போடி, அக். 17: எண்ணெய்ப் பனை சாகுபடி திட்டத்தை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என, சென்னை வேளாண்மை கூடுதல் இயக்குநர் ந.பொன்னுச்சாமி வலியுறுத்தினார்.

போடி வட்டாரம், ராசிங்காபுரம் கிராமத்தில் நடைபெற்ற ஐசோபாம் எண்ணெய் பனை திட்டத்தின்கீழ், எண்ணெய் பனை சாகுபடி குறித்த 2 நாள் பயிற்சிமுகாமில் அவர் பேசியதாவது:

நாடு அரிசி, கோதுமை, பால் மற்றும் சிறு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுவிட்டாலும், சமையல் எண்ணெய் உற்பத்தியில் அதிக அளவில் முன்னேற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

நாட்டிற்கு தேவைப்படும் சமையல் எண்ணெயின் உள்நாட்டு உற்பத்தி போதுமான அளவு இல்லாததால் மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வருகிறோம். இது வரும் ஆண்டுகளில் 80 லட்சம் டன்களை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மொத்த சமையல் எண்ணெய் இறக்குமதியில் பாமாயிலின் அளவு 60 சதவீதம். இது சுத்திகரிக்கப்படாத பாமாயிலாகவும் உள்ளது.

இதனால் ஆண்டுதோறும் பல ஆயிரம் கோடி ரூபாய் செலாவணி விரையமாகிறது.

இதனைக் கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடியை ஊக்குவிக்க, இதுபோன்ற பயிற்சிகளை அளித்து வருகின்றன. இத்திட்டம் 13 மாவட்டங்களில் நடைமுறைபடுத்தப்பட்டு வருவதாவும், தேனி மாவட்டத்தை பொருத்த மட்டும் 20 ஆயிரம் ஹெக்டேருக்கு சாகுபடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேனி வேளாண்மை இணை இயக்குநர் எஸ். செல்லத்துரை திட்டம் பற்றி விளக்கம் அளித்தார்.

போடி வேளாண்மை உதவி இயக்குநர் அ. ஜெகப்பிரியாபதி வரவேற்றார். வேளாண்மை அலுவலர் சின்னவெளியப்பன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் 60 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. உப்பார்பட்டி, தம்மிநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் நடப்பட்டுள்ள எண்ணெய் பனை சாகுபடி விவசாயிகளின் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டு விளக்கம் அளிக்கப்பட்டது.

அப்போது வேளாண்மை அலுவலர் சென்றாயன் வலை கட்டுதல், நடவு நடுதல், சொட்டுநீர்ப் பாசனம் அமைத்தல், பூச்சி நோயைக் கட்டுப்படுத்துதல், களை நிர்வாகம், அறுவடை குறித்து விளக்கினார்.

மேலும், புகைப்பட விளக்கக் கண்காட்சியும் நடைபெற்றது. ராசிங்காபுரம் ஊராட்சித் தலைவர் கோபிநாத் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**வேதாரண்யம் பகுதியில் சவுக்கு நேரடிக் கொள்முதல் முடக்கம்: விவசாயிகள் பாதிப்பு**

கே.பி. அம்பிகாபதி

First Published : 19 Oct 2010 03:26:05 AM IST



வேதாரண்யம் : நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் சவுக்கு மரங்களை அரசுத் துறை நிறுவனங்கள் நேரடியாகக் கொள்முதல் செய்யும் நடைமுறை முடக்கப்பட்டதால், நியாயமான விலை கிடைக்காமல் சவுக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேதாரண்யம் பகுதிக்குள்பட்ட மானாவாரி நிலப்பரப்பில் பல ஆண்டுகளாக சவுக்கு மரங்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

சவுக்கு பயிரிட ஏற்ற மணல் பாங்கான நிலத்தையுடைய பெரியகுத்தகை, புஷ்பவனம், தேத்தாகுடி, கரியாப்பட்டினம், செட்டிப்புலம், கருப்பம்புலம், செண்பகராயநல்லூர், மருதூர், ஆயக்காரன்புலம், தகட்டூர் ஆகிய கிராமங்களில் சவுக்கு சாகுபடி செய்யப்படுகிறது.

அண்மைக் காலமாக நெல் சாகுபடியில் ஏற்பட்டு வரும் செலவு அதிகரிப்பு, வடிகால், பாசனம் உள்ளிட்ட பிரச்னைகள் காரணமாக நெல் வயல்களிலும் சவுக்கு மரங்களை விவசாயிகள் வளர்ப்பது அதிகரித்து வருகிறது.

எரிபொருள், இழை தயாரிப்பு, கட்டுமானம் உள்ளிட்ட தேவைகளுக்காக சவுக்கு மரங்கள் வெளியிடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அதிகரித்த எரிவாயு அடுப்பு, பிளாஸ்டிக் பொருள்களின் பயன்பாடுகளால் தேவை குறைந்ததால், சவுக்கு மரங்களுக்கான சந்தை வாய்ப்புகளும் குறைந்தன.

ஆனால், 2006-ம் ஆண்டுக்கு முன்பு ஈரோடு, பள்ளிப்பாளையம் காகித ஆலை, கோவை, திருப்பூர், திருச்சி, கரூர், காங்கேயம் உள்ளிட்ட இடங்களுக்கு அதிக அளவு சவுக்கு மரக் கட்டைகள் அனுப்பப்பட்டன.

இதையடுத்து, சந்தை விலையும் அதிகரித்தது. குறிப்பாக, 2000-வது ஆண்டில் ஒரு டன் சவுக்கின் சராசரி விலை ரூ. 800 முதல் ரூ. 2 ஆயிரமாக இருந்தது. இது 2006-ல் ரூ. 1,300 முதல் ரூ. 3,600 வரை கொள்முதல் செய்யப்பட்டது.

இந்நிலையில், உற்பத்தியாகும் சவுக்கு மரங்களை அரசு சார்ந்த காகித ஆலைகளே நேரில் கொள்முதல் செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இதை ஏற்ற அப்போதைய நாகை மாவட்ட ஆட்சியர் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இதையடுத்து, தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம், கரூர் காகிதபுரத்தில் உள்ள காகித ஆலைக்கு இங்குள்ள சவுக்கு மரங்களை நேரடியாகக் கொள்முதல் செய்ய முன் வந்தது.

இதற்கான மையங்கள் தேர்வு செய்யப்பட்டு கொள்முதல் பணிகளும் தொடங்கப்பட்டன ஆனால், சில காரணங்களால் அதன் தொடர் செயலாக்கத்தில் தேக்க நிலை ஏற்பட்டு அதற்கான தொடர்பு அலுவலகங்களும் மூடப்பட்டன.

தற்போது தனியார் முகவர்கள் மட்டுமே டன் சராசரியாக ரூ. 1,600-க்கு சவுக்கை கொள்முதல் செய்கின்றனர். அதுவும் உரிய பணம் உடனடியாகவும் கிடைப்பதில்லை.

இதனால், சவுக்கு பராமரிப்புக்கு 5 ஆண்டுகளில் ஆகும் செலவினத்தைக் கணக்கிடும்போது விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து வேதாரண்யம் பகுதி சவுக்கு உற்பத்தி விவசாயிகள் கூட்டமைப்பின் தலைவர் மருதூர் தெற்கு எஸ். ஜெகநாதன் கூறியது:

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நேரடிக் கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு நிர்வாகம் செய்தது. சராசரியாக டன் ஒன்றுக்கு ரூ. 2 ஆயிரம் கிடைத்தது. நேரடியாக எடை போடப்பட்டு கழிவுகள் இல்லாமல், உடனுக்குடன் பணமும் கிடைத்தது. இது கட்டுப்படியாகும் விலையாகவும் இருந்தது.

ஆனால், ஏதோ காரணத்தால் தற்போது கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நேரடிக் கொள்முதல் முறையைச் செயல்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சவுக்கு மரத்துக்கு அரசே விலை நிர்ணயம் செய்ய வேண்டும். கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு நடைமுறையில் இருந்ததைப்போல சவுக்குச் சாகுபடி செலவுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வழங்க வேண்டும் என்றார் அவர்.

வேளாண் உற்பத்திக்கு பல்வேறு திட்டங்களைக் கொண்டுவரும் அரசு இங்கு உற்பத்தியாகும் சவுக்கு மரங்களையும், நாகை, திருவாரூர் மாவட்டங்களில் நெல் அறுவடைக் காலத்தில் வீணாகி வரும் வைக்கோலையும் மூலப்பொருளாகக் கொண்டு இந்தப் பகுதியில் காகித ஆலை தொடங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பு.

தினமலர்

**ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2010,02:59 IST

மோகனூர்: ஒருவந்தூர்புதூரில் நாளை (அக்., 20) ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி முறை குறித்த விழிப்புணர்வு முகாம் மற்றும் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்படுகிறது. மோகனூர் வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜு வெளியிட்டுள்ள அறிக்கை: மோகனூர் வட்டாரத்தில் பரவலாக மழை பெய்து வருவதால், சம்பா பருவத்துக்கான நாற்றுவிடும் பணி துவங்கப்பட்டுள்ளது. நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், "ராஜராஜன் 1,000' நெல் சாகுபடி முறையை கையாண்டு மகசூல் பெறலாம். ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி முறை குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சிறப்பு முகாம் மற்றும் செயல்விளக்கம் நாளை (அக்., 20) காலை 10 மணிக்கு மோகனூர் யூனியன் ஒருவந்தூர்புதூர் அடுத்த வெள்ளை பிள்ளையார் கோவில் அருகே நடக்கிறது. அதில், வேளாண் துறை உயர் அலுவலர்கள் பங்கேற்று நெல் நடவு முறை, கோனோவீடர் களைக்கருவி பயன்படுத்துதல் குறித்து செயல்விளக்கம் செய்து காண்பிக்கின்றனர். அனைத்து நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளும் பங்கேற்று பயன்பெறலாம்.

**மானிய விலையில் காய்கறி விதை சப்பை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2010,03:30 IST

நாமக்கல்: "நாமக்கல் வட்டாரத்தில் 50 சதவீதம் மானிய விலையில், காய்கறி விதைகள் விற்பனை செய்யப்படுகிறது' என, நாமக்கல் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமக்கல் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலை அலுவலகத்தில் நம்பர் 10 வீரிய ரக வெண்டை, உயர் ரக சிறுகீரை, பாகல், கொத்தவரை மற்றும் தக்காளி விதைகள் 50 சதவீதம் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிக பட்சம் 1.25 ஏக்கருக்கு உரிய காய்கறி விதைகள் மானிய விலையில் வழங்கப்படும். விவசாயிகள் தேவைக்கு தோட்டக்கலை அலுவலகத்தை தொடர்பு கொண்டு காய்கறி விதைகள் மானிய விலையில் பெற்று பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மாவுப் பூச்சி தாக்குதல்: பயிர் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2010,01:15 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பயிர்களில் அதிக அளவில் மாவு பூச்சிகள் தாக்குதல் பரவலாக உள்ளதை அதை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் துறையினர் அறிவுரை கூறியுள்ளனர்.

வேளாண் இணை இயக்குனர் மனோகரன் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் மாவு பூச்சியின் தாக்குதல் பரவலாக பப்பாளி, கொய்யா மற்றும் மரவள்ளி பயிர் தாக்குதல் காணப்படுகிறது. இவை செடிகளில் இருந்து சாற்றை உறிஞ்சுவதால் வளர்ச்சி பாதிக்கப்பட்டு செடிகள் காய்ந்து வருகிறது. செடியின் நுனிப்பகுதி புதர் போல் காணப்படும். மாவு பூச்சியின் இனிப்பு சுவையுள்ள கழிவு பொருளை வெளியேற்றுவதால், எலும்புகளால் இந்த மாவு பூச்சியை பரவுவதற்கு பயன்படுவதோடு ஒட்டுண்ணிகள் மற்றும் இரை விழுங்கிகளிடம் இருந்து மாவு பூச்சிகளை பாதுகாக்க உதவுகிறது. மாவு பூச்சிகள் மேல் வெள்ளை நிற மெழுகு பொருள் காணப்படுவதால், முழு கட்டுப்பாடு செய்வது கடினம். இதை ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மூலம் கட்டுப்படுத்தலாம். வயல் வரப்புகளில் உள்ள பார்த்தினியம் போன்ற களைகள் மற்றும் பிற உதிர்ந்த குப்பைகளை நீக்குவதன் மூலம் மாவு பூச்சிகளின் மாற்று உணவு வசதி தடை செய்யப்படுகிறது. தாக்குதல் தென்பட்டவுடன் பரவாமல் இருக்க தாக்கப்பட்ட செடிகளை பிடிங்கி அழிக்க வேண்டும். பருத்தி பயிரில் தாக்குதல் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளதால், கண்காணிப்பு அவசியம் தேவை. பயறு வகைகளை ஒரப்பயிராக சாகுபடி செய்ய வேண்டும்.

இதனால், இரை விழுங்கிகள் பிரிட்டோ வேமஸ் பொறி வண்டின் புழுக்கள் அதிகம் உற்பத்தியாகி மாவு பூச்சிகள் தாக்கி உண்ணும். மாவு பூச்சிகளோடு எறும்புகளை சேர்த்து கட்டுப்படுத்துவதால் மாவுப் பூச்சிகள் பரவாமல் தடுக்கலாம்.

தாக்குதல் அதிகம் காணப்படும் போது ரசாயன மருந்துகளில் ஏதேனும் ஒன்றை 15 லிட்டருக்கு ஒரு முறை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். கைத்தொளிப்பான் பயன்படுத்த வேண்டும். செடிகளில் மேல் மற்றும் அடிப்பகுதி தண்டை சுற்றியும் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு கார்பரில் 50 சதம் 2.5 கிலோ, தைபோடிகளர்ப் 75 சதம் 750 கிராம், பரப்பனோபாஸ் 25 சதம் 1.25 லிட்டர், குயினல்பாஸ் 25 சதம் 2 லிட்டர் குளோர்பைரிபாஸ் 25 சதம் 2.5 லிட்டர் மேலும் வெப்ப எண்ணெய் 2 லிட்டர் அளவில் சேர்க்க வேண்டும். இதனுடன் ஒட்டும் திரவம் அல்லது காதி சோப்பு கலந்து ஐந்து நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். இவ்வாறு மாவு பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**போதுமான உரம் இருப்பு: வேளாண் அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2010,01:20 IST

தர்மபுரி: "தர்மபுரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தேவையான உரம் இருப்பு உள்ளது, ' என மாவட்ட வேளாண்மை துறை இணை இயக்குனர் மனோகரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் தற்போது பரவலான மழை பெய்து வருகுடறது. மழையை பயன்படுத்தி விவசாய சாகுபடி பணிகள் முழுவீச்சில் நடக்கிறது. மாவட்டத்தில் உள்ள 283 தனியார் உரக்கடைகளிலும், 132 வேளாண்மை கூட்டுறவு வங்களிலும் விவசாயிகளுக்கு தேவையான அனைத்து வகை உரங்களும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தொடக்க கூட்டுறவு வங்கியில் தற்போது 1089 மெட்ரிக் டன் டி.ஏ.பி., உரம் வரப்பெற்று அனைத்து கூட்டுறவு சங்கங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தர்மபுரி டான்பெட் இருப்பு குடோனில் 54 மெட்ரிக் டன் டி.ஏ.பி., உரம் வைக்கப்பட்டுள்ளது.  யூரியா 550 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் உரம் 2,650 மெட்ரிக் டன்னும் தனியார் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் போதுமான அளுவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்களுக்கு தேவையான உரத்தினை கூட்டுறவு சங்கத்தினை அணுகி பெற்று பயனடையுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**நெற் பயிர்களை நாசம் செய்யும் எலிகள் விவசாயிகள் பெரும் கலக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2010,01:29 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் எலிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளதால் விளைச்சல் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது 21,750 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக கே.ஆர்.பி, அணை பாசன பகுதிகள், தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதிகளில் அதிக பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பூ பருவம், பால் பிடிக்கும் பருவம் மற்றும் அறுவடை நிலை என அனைத்து பருவங்களிலும் உள்ளது. இந்நிலையில் தற்போது நெல் பயிரில் எலிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளது. குறிப்பாக வரப்பு எலி, வெள்ளை எலி, புல் எலி மற்றும் சுண்டெலிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளது.

நெற் கதிர்கள் வளர்ந்து நிற்கும் நிலையில் எலிகள் கதிர்களை வெட்டி எடுத்து வலைகளில் சேமித்து வைக்கிறது. எலிகளின் தாக்குதலால் ஐந்து முதல் 10 சதவீதம் மகசூல் குறைகிறது. எலிகளின் இனப்பெருக்கத்துக்கு ஏற்ற காலம் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களாகும். அனைத்து வகையான எலிகளும் நெற்பயிரினை அனைத்து நிலைகளிலும் தின்று தீர்க்கிறது. எலி வகைகள் அனைத்தும் நன்றாக நீந்தக்கூடியவை என்பதால் வயல்களில் தேக்கப்படும் நீர் எலிகளின் தாக்குதலுக்கு ஒரு தடையாக இல்லை. எலிகளின் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர். நெற் பயிரை அழிக்கும் எலிகளை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து மாவட்ட வேளாண் இணை இயக்குனர் ராஜன் கூறியது: நெற்பயிரை பலவகையில் தாக்கி சேதம் உண்டாக்கும் எலிகளை கட்டுப்படுத்த உழவியல், கைவினை, ரசாயன மற்றும் உயிரியல் முறைகளை கையாள வேண்டும். பயிற் பருவத்தின் துவக்கத்தில் வரப்புகளை வெட்டி எலிகளை பிடித்து அழிக்க வேண்டும். எலிகள் வளைகளை அமைக்க முடியாதபடி குறுகிய வரப்புகளையே அமைக்க வேண்டும்.

வயலுக்கு அருகாமையில் வைக்கோல் போர் அமைக்க கூடாது. வயல்களிலும், வரப்புகளிலும் சிறு செடிகளோ, களைகளோ இல்லாமல் அழிக்க வேண்டும். பயிர் காலத்தில் தஞ்தாவூர் எலிக்கிட்டிகளை ஏக்கருக்கு 20 முதல் 25 கிட்டிகளை வரப்பிலிருந்து உள்புறமாக மூன்று மீட்டர் விட்டு வைக்க வேண்டும். எலிகளின் இயற்க்கை எதிரிகளான தண்ணீர் பாம்புகளை கொல்லக்கூடாது. ஆந்தை போன்ற இரவுப் பறவைகள் அமர்வதற்கு "டி' வடிக் குச்சிகளை வயல்களிலும், வரப்புகளிலும் வைக்க வேண்டும். மேலும் "ஜிங்பாஸ்பைடு' மருந்தினை 1:49

அல்லது வார்பரின் 1:19 என்ற அளவில் நெல் பொறியுடன் கலந்து சிறிது தேங்காய் எண்ணையும் கலந்து விஷ பொறி தயாரித்து வைக்கலாம். அலுமினியம் "பாஸ்பைடு' மாத்திரை வலை ஒன்றுக்கு ஒன்று வீதம் இட்டு வலையை ஈர களிமண் கொண்டு மூட வேண்டும். ரத்தக் கசிவை ஏற்படுதுகின்ற "புரோமடையலோன்' 0.005 சத ரோபேன் கேக்குகளை வரப்புகளில் மூன்று மீட்டர் இடைவெளிக்கு ஒரு கட்டி வீதம் வைத்தும் எலிகளை ஒழிக்கலாம். இந்த கட்டுப்பாட்டு முறைகளை விவசாயிகள் தனித்தனியாக மேற்கொள்ளாமல் ஒருங்கிணைந்த வகையில் ஒரு கிராமத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் கையாண்டு எலிகள் தாக்குதலில் இருந்து நெற் பயிரை பாதுகாக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**பவானி பகுதியில் அதிக வருமானம் தரும் சேனைக்கிழங்கு சாகுபடி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2010,03:16 IST

ஈரோடு: பவானி, அம்மாபேட்டை பகுதியில் வருமானம் அதிகம் ஈட்டி தரும் சேனைக்கிழங்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளன. பவானி, அம்மாபேட்டை பகுதியில் பெருமளவு விவசாய நிலத்தில் மக்காச்சோளம், பருத்தி, புகையிலை, திணை வகைகள், பருத்தி உள்ளிட்ட பல்வேறு விளை பொருட்கள் பயிரிடுகின்றனர்.
இதுதவிர, வருமானம் அதிகம் ஈட்டி தரக்கூடியதும், மூலதன செலவு குறைவானதுமான சேனைக்கிழங்கு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டியுள்ளனர். இருபது ஆண்டுக்கு முன், கம்பின் ஊடுபயிராக சேனைக்கிழங்கு பயிரிடப்பட்டது. கம்போடு ஊடுபயிராக பயிரிடப்பட்ட சேனைக்கிழங்கு சாகுபடியில் நல்ல லாபம் இருந்தது. ஆனால், விளைந்த கம்பை சேதப்படுத்தும் குருவிகளின் தொல்லை அதிகரித்தது. இதனால், தற்போது கம்போடு சேனைக்கிழங்கை ஊடுபயிராக பயிர் செய்வதை தவிர்த்து விட்டனர். ஒரு சில பகுதிகளில் மஞ்சள், பருத்தி ஆகிய பயிர்களோடு ஊடுபயிராக சேனைக்கிழங்கு பயிரிட்டு வருகின்றனர். பங்குனி மற்றும் மாசி மாதத்தின் இரண்டாவது வாரம் சேனைக்கிழங்கு பயிரிட ஏற்ற பருவம். ஒரு ஏக்கர் பரப்பளவில் சேனைக்கிழங்கு பயிரிட 10 ஆயிரத்தில் இருந்து 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. மாதத்துக்கு மூன்று முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. அந்தளவுக்கு வேரில் ஈரப்பசையை தக்க வைத்திருக்கும் தன்மை கொண்டது. தண்டின் வளர்ச்சியை பொறுத்து, அடி உரம் இட வேண்டும். மற்ற பயிர்களை போல, மருந்து தெளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால், மருந்துக்குண்டான செலவு இல்லை. ஒன்பது மாதத்தில் அறுவடைக்கு வரும் கிழங்குக்கு புரட்டாசி, ஐப்பசி மாதத்தில் நல்ல லாபம் கிடைக்கிறது. சேனைக்கிழங்கை பொருத்தவரை, சமையலுக்கு அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. பெருந்துறை, கோபி,

வேட்டைகாரன்கோவில் ஆகிய இடங்களில் வியாபாரிகள் உள்ளனர். இவர்கள், பவானி, அம்மாபேட்டை பகுதியில் பயிரிட்டு, அறுவடைக்கு காத்திருக்கும் கிழங்கை நேரடியாக கொள்முதல் செய்கின்றனர். ஒரு ஏக்கரில் பயிரிடப்பட்டு, நன்கு பராமரிக்கப்படும் சேனைக்கிழங்கு செடியிலிருந்து 12 லிருந்து 15 டன் வரை கிழங்கு கிடைக்கிறது. சீஸன் காலத்தில் ஒரு டன் கிழங்கு 15 ஆயிரத்திலிருந்து 18 ஆயிரம் ரூபாய் வரை விலை போகிறது. ஒரு ஏக்கரில் நன்கு விளைந்த கிழங்குர் இரண்டு லட்சம் ரூபாய் வரை விற்கிறது. சேனைக்கிழங்கு பயிரில் நல்ல லாபம் கிடைப்பதால், பவானி, குருப்பநாயக்கன்பாளையம், ஊராட்சிக்கோட்டை, மைலம்பாடி, வெண்டிபாளையம், ஒலகடம், கல்பாவி, கருக்குபாளையம் உள்ளிட்ட பல இடங்களில் உள்ள விவசாயிகள் பரவலாக சேனைக்கிழங்கு சாகுபடியில் ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர்.

**பவானிசாகர் பகுதியில் குண்டுமல்லி விலை சரிவு விவசாயிகள் அதிருப்தி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2010,03:12 IST

டி.என்.பாளையம்: பவானிசாகர் பகுதியில் குண்டுமல்லி விலையில் ஏற்பட்ட திடீர் சரிவால் விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர். பவானிசாகர் பகுதியில் குண்டு மல்லி சாகுபடி விறுவிறுப்பாய் நடந்து வருகிறது. குண்டு மல்லி 10 ஆண்டுகள் வரையிலும் பூக்கும் செடி. ஏக்கருக்கு 3500 முதல் 4000 நாற்றுகளை நட முடியும். ஒரு நாற்று ஒன்றேகால் ரூபாய்க்கு வாங்கப்படுகிறது. நாற்று நடப்பட்டு  எட்டு மாதத்துக்கு பிறகு குண்டு மல்லி பூக்கத் தொடங்கும். மல்லி பயிரிட ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. குண்டு மல்லி பூக்கள் பனிக்காலம் தவிர பிற காலங்களில் நல்ல விளைச்சலை கொடுக்கும். குண்டு மல்லிப்பூக்கள் ஆண்டுக்கு ஒரு ஏக்கருக்கு இரண்டு முதல் மூன்று டன் வரை விளைச்சலை கொடுக்கிறது. பவானிசாகர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளான கொத்தமங்கலம், கெஞ்சனூர், பகுத்தம்பாளையம், ராஜன் நகர் பகுதிகளில் குண்டு மல்லி சாகுபடி அமோகமாய் உள்ளது. சத்தி மலர் சந்தையிலிருந்து பூக்கள் வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பத்து நாட்களுக்கு முன்பு ஒரு கிலோ குண்டு மல்லி எட்டு ரூபாயாக இருந்தது. பின்னர், படிப்படியாக உயர்ந்து ஒரு கிலோ 80 ரூபாய்க்கு உயர்ந்தது. ஆயுத பூஜையை முன்னிட்டு இரண்டு நாட்களாய் மல்லி விலை இன்னமும் அதிகரித்து ஒரு கிலோ 250 ரூபாயாக உயர்ந்தது. இதனால் மல்லி விளைவித்த விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியில் இருந்தனர். ஆனால், நேற்று குண்டு மல்லி விலை மிகவும் சரிந்து கிலோ 50 முதல் 60 ரூபாய்க்கு விற்றது. திடீர் சரிவால் விவசாயிகள் மிகுந்த கவலையில் உள்ளனர். தமிழ்நாடு விவசாயிகள் மலர்கள் உற்பத்தியாளர் தலைமை சங்கத் தலைவர் முருகேசன் கூறுகையில்,"" ஆயுத பூஜையை ஒட்டி மல்லி விலை

அதிகரித்திருந்தது. ஒரு வாரமாக மல்லி விலை உச்சியைத் தொட்டிருந்தது. ஆயுத பூஜை முடிவடைந்து விட்டமையால் நேற்று குண்டு மல்லி விலை மீண்டும் பழைய நிலைக்கே சென்று 50 முதல் 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது," என்றார்.

**ஆனைமலையில் கொப்பரை ஏலம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2010,21:40 IST

பொள்ளாச்சி: ஆனைமலை விற்பனைக்கூட ஏலத்தில் ஒரு கிலோ கொப்பரைக்கு 43.25 ரூபாய் விலை கிடைத்தது.ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 40 பேர் 44 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) சந்திரசேகர் ஏலம் நடத்தினார்.முதல் தர கொப்பரை 27 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 42.30 ரூபாய் முதல் அதிகபட்சமாக 43.25 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 17 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 36.15 ரூபாய் முதல் அதிகபட்சமாக 39 ரூபாய் வரை விலை கிடைத்தது.அதிகாரிகள் கூறுகையில், "ஆனைமலை ஏலத்திற்கு கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது கொப்பரை வரத்து குறைந்துள்ளது. ஆயுதபூஜை பண்டிகை விடுமுறையால் கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. ஈரப்பதம் அதிகமுள்ள கொப்பரை ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதனால், வெளிமார்க்கெட் விலையை விட ஏலத்தில் கொப்பரைக்கு விலை குறைந்துள்ளது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது முதல் தர கொப்பரை கிலோவுக்கு 4.70 ரூபாயும், இரண்டாம் தர கொப்பரை கிலோவுக்கு 6.50 ரூபாயும் விலை உயர்ந்துள்ளது' என்றனர்.

**பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு நுண்ணுயிர் உரம் பயன்படுத்த யோசனை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2010,23:39 IST

பொங்கலூர்: பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு நுண்ணுயிர் உரங்களை பயன்படுத்துமாறு, பொங்கலூர் வேளாண் உதவி இயக்குனர் (பொ) மனோஜ்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:காற்றில் இருக்கும் தழைச்சத்தை நிலைநிறுத்தியும், மண்ணில் கரையாமல் இருக்கும் மணிச்சத்தை கரைத்தும் கொடுக்கக்கூடிய திறன் பெற்ற நுண்ணுயிர்களை,

நுண்ணுயிர் உரங்கள் என அழைக்கிறோம். தழைச்சத்தை நிலை நிறுத்தும் முக்கியமான நுண்ணுயிர்களில் ரைசோபியம், அசோஸ்பைரில்லம், அசிட்டோபாக்டர், நீலப்பச்சைபாசி மற்றும் அசோலா போன்றவை முக்கியமானவை. பாஸ்போ பாக்டீரியா மணிச்சத்தை கரைத்து கொடுக்கும் நுண்ணுயிரியாகும்.ஒருங்கிணைந்த பயிர் உற்பத்தி தொழில்நுட்பத்தில் நுண்ணுயிர் உரங்களை உபயோகப்படுத்துவதால், மண்ணின் வளம் மேம்படுவதோடு மண்ணின் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படுகிறது. நுண்ணுயிர் உரங்களை உபயோகப்படுத்துவதால், 30 சதவீதம் தழைச்சத்தும், 20 சதவீதம் மணிச்சத்தும் சேமிக்கப் படுகிறது.அசோஸ்பைரில்லம் காற்றில் இருக்கும் தழைச்சத்தை நிலை நிறுத்துவதோடு, பயிர் வளர்ச்சிக்கு தேவைப்படும் வளர்ச்சி ஊக்கிகளை உற்பத்தி செய்கிறது. இதனால், பயிர்களின் வேர்களும், தண்டுப் பாகமும், இலைகளும் வேகமாக வளர்கின்றன.மண்ணில் இடப்படும் மணிச் சத்தில் பெரும் பகுதி மண்ணில் ஏற்படும் ரசாயன மாற்றத்தால் கரைக்க முடியாத நிலைக்கு மாற்றப்படுகிறது. இதனால், பயிர்கள் மணிச்சத்தை எடுத்து உபயோகிக்க முடிவதில்லை. புரஸ்போபாக்டீரியா நுண்ணுயிரி தன் செல்களில் இருந்து சுரக்கும் அங்கக அமிலங்கள் மூலமாக, கரையாமல் இருக்கும் மணிச்சத்தை கரைத்து, பயிர்கள் எடுத்துக் கொள்ளும் நிலைக்கு மாற்றிக் கொடுக்கின்றன.மணிச்சத்தை கரைத்துக் கொடுக்கும் பாஸ்போ பாக்டீரியாவை, தழைச்சத்தை நிலைநிறுத்தும் ரைசோபியம் மற்றும் அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் களுடன் கலந்து இடுவதால் இரண்டு நுண்ணுயிர் உரங்களின் செயல் திறனும் அதிகமாகிறது. நுண்ணுயிர் உரங்கள் தேவைப்படும் விவசாயிகள், பொங்கலூர் வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம், என்று கூறியுள்ளார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்29ம் தேதி நடக்கிறது**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2010,23:42 IST

உடுமலை: உடுமலை கோட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர் கூட்டம் வரும் 29ம் தேதி நடக்கிறது.உடுமலை, மடத்துக்குளம் தாலுகாவை உள்ளடக்கிய உடுமலை கோட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர் கூட்டம் வரும் 29ம் தேதி காலை 11.00 மணிக்கு, உடுமலை தாலுகா அலுவலகத்தில் நடக்கிறது.இதில் விவசாயிகள் பங்கேற்று பயன்பெறுமாறும், கடந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பொருட்களில், அரசு துறைகள் தொடர்பான மனுக்கள் மற்றும் குறைகள் குறித்த அறிக்கை நிலுவை இருப்பின் உடனடியாக கோட்டாட்சியர் அலுவலகத்திற்கும், சம்பந்தப்பட்ட மனுதாரர்களுக்கும் அனுப்பி வைக்குமாறும், கூட்டத்தில் அதற்கான பதிலினை விளக்க வேண்டும் எனவும் அரசு துறை அதிகாரிகளுக்கு கோட்டாட்சியர் சோமசேகரன் தெரிவித்துள்ளார்.

**காமராஜர் கனவில் உதித்த விதைப்பண்ணை காட்டுச்செடி தோட்டமாக மாறிய அவலம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2010,01:22 IST

கரூர்: கரூர் மாவட்டம், இனுங்கூரில் விவசாயம் செழிக்க முன்னாள் முதல்வர் காமராஜர் துவக்கிவைத்த விதைப்பண்ணை, வேளாண்துறை அலுவலர்கள் அலட்சியத்தால் செயல்பாடின்றி முடங்கிப்போனது. முன்னாள் முதல்வர் காமராஜர் ஆட்சி காலத்தில், தமிழகத்தில் துவங்கப்பட்ட இரண்டு விதைப்பண்ணையில் ஒன்றை, 1963ல் கரூர் மாவட்டத்தில், இனுங்கூர் பஞ்சாயத்தில் துவக்கிவைத்தார். இனுங்கூர் விதைப்பண்ணை, மூன்று குளங்களுடன் 205 ஏக்கர் பரப்பளவில் அமைந்தது. பண்ணை பணியாளர்களுக்கு 12 குடியிருப்பு மற்றும் அதிகாரிகளுக்கு மூன்று குடியிருப்பு கட்டப்பட்டது. விதை நெல் தரம் பிரித்தல், பாதுகாத்தல் தேவைக்கு பெரிய அளவிலான நான்கு குடோன் கட்டப்பட்டது. தேவையான இயந்திரங்கள், வாகனம் நிறுத்தவும், கருவிகள் பாதுகாக்கவும் தனியறைகள் அமைக்கப்பட்டது. நிர்வாக அலுவலகம், கோப்புகள் வைப்பதற்கு என தனிக்கட்டிடம் உள்ளது. இங்கு உற்பத்தியான தரமான விதைகள், தஞ்சை, திருவாரூர், நாகை, கோவை, தர்மபுரி, கரூர் என பல மாவட்டத்துக்கு அனுப்பப்பட்டது.

விதைப்பண்ணையில் அலுவலர் , விவசாய கூலி என நூற்றுக்கு மேற்பட்டோர் பணிபுரிந்தனர். காலப்போக்கில் அதிகாரிகள் குடியிருப்பில் தங்காமல் தங்கள் வசதிக்கு திருச்சி, கரூர் என நகர பகுதியில் தங்கினர். அலுவலர்கள் பலர் இடமாற்றம் பெற்ற நிலையில், காலிப்பணியிடம் நிரப்பப்படாமல் தொடர்ந்தது. இதனால், பணியாளர் பற்றாக்குறை காரணமாக விதைப்பண்ணை செயல்பாடு குறித்து அலுவலர்கள் கண்டுக்கொள்ளவில்லை. விதைப்பண்ணை வளாகத்தில் இருந்த விலை மதிப்புள்ள மரங்கள் படிப்படியாக வெட்டி எடுக்கப்பட்டன. குடியிருப்புகளும் வீணாகி, பகுதி மக்கள் கால்நடை வளர்க்கும் கூடமாக மாறிவிட்டது. உள்ளே இருந்த தளவாடங்களும் திருடப்பட்டன. விவசாயி தேவைக்கு வைத்திருந்த மழை மானி, இயந்திர மோட்டார் உள்ளிட்டவையும் களவுபோனது. விளை நிலமாக இருந்த விதைப்பண்ணை தற்போது, முட்புதர் மண்டிக்கிடக்கும் விஷஜந்துகளின் பிறப்பிடமாக மாறிவிட்டது, இத்துடன், சுற்றுச்சுவர் இல்லாமல் நிலமும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் கூறியதாவது: இனுங்கூர் விதைப்பண்ணையில் 100க்கும் மேற்பட்ட விவசாயக்கூலிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது. இங்கு வரும் அதிகாரிகள் தொடர்ந்து பணியில் இல்லாததால், பண்ணை வளர்ச்சி முடங்கியது. அதிகாரிகள் கண்காணிப்பு இல்லாமல்

காமராஜரின் கனவு திட்டம் சீரழிந்து கிடக்கிறது. பெருமைக்குரிய விதைப்பண்ணை நிலம் ஆக்கிரமிப்பு அகற்றி, மீண்டும் புதுப்பிக்க விவசாயத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய, மாநில அரசுகள் விவசாயிக்கு பல திட்டங்களை மட்டும் அறிவிப்பதுடன், இவ்வாறு முடங்கிய திட்டத்தையும் புதுப்பிக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**நிபந்தனையின்றி விவசாய கடன் விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2010,01:24 IST

கரூர்: தமிழ்நாடு விவசாயிகள் சங்க கரூர் மாவட்டக்குழு கூட்டம் மாவட்ட கட்சி அலுவலகத்தில் நடந்தது. நிர்வாகி தங்கவேல் தலைமை வகித்தார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சார மோட்டார் வழங்க வேண்டும். மின்மோட்டாரில் மீட்டர் பொருத்துவதை கைவிட வேண்டும். கூட்டுறவு சங்கங்களில் அனைத்து விவசாயிகளுக்கும் நிபந்தனையின்றி தனிநபர் விவசாய கடன் வழங்க வேண்டும். இயந்திரம் கொண்டு ஆற்றில் மணல் அள்ளுவதை நிறுத்த வேண்டும்.

அமராவதி ஆற்றிலும், சணப்பிரட்டி ராஜவாய்க்காலிலும் கலக்கும் சாயக்கழிவு நீரை தடுக்க வேண்டும். உச்சநீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்த வேண்டும். கரும்புக்கு டன் ஒன்றுக்கு 3,000 ரூபாயும், நெல் குவிண்டால் ஒன்றுக்கு 1,500 ரூபாயும் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும், இத்தீர்மானங்களை வலியுறுத்தி வரும் 26ம் தேதி கரூர் பஸ் ஸ்டாண்ட ரவுண்டானா அருகில் ஆர்ப்பாட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் பெரியசாமி, மாவட்ட துணை தலைவர் சேஷன், விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் குருநாதன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**"ராஜராஜன் 1,000' சாகுபடி திருச்சி ஆர்.டி.ஓ., ஆய்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2010,01:51 IST

முசிறி: முசிறி வேளாண் கோட்டத்தில், "ராஜராஜன் 1000' நெல் சாகுபடியை டி.ஆர்.ஓ., ராமன் பார்வையிட்டார். முசிறி அடுத்த மூவானூரில் கடந்த மூன்று ஆண்டாக "ராஜராஜன் 1000' நெல்

சாகுபடி முறையை பின்பற்றி வரும் முன்னோடி விவசாயி வரதராஜன் வயலை டி.ஆர்.ஓ., ராமன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதுகுறித்து டி.ஆர்.ஓ., ராமனிடம் விவசாயி வரதராஜன் கூறுகையில், ""இம்முறையில் நெற்பயிர் சாகுபடி செய்வதால் செலவு குறைவாக உள்ளது. மகசூல் இரட்டிப்பாகி லாபம் கிடைக்கிறது. குறைந்தளவு தண்ணீரும், விதைகளும் போதுமானதாக உள்ளது. சாதாரண நெல் நடவு முறையில் ஒரு கதிரில் 200 நெல்மணிகள் மட்டுமே இருக்கும்.

ஆனால் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறையில் ஒரு கதிரில் 400 முதல் 500 நெல்மணிகள் இருப்பதே அதிக மகசூலுக்கு காரணம். வேளாண் அதிகாரிகளின் ஆலோசனையில் நடவு நாட்களில் இருந்து கேட்டு பின்பற்றினால் இந்த நெல் சாகுபடி முறையில் தோல்வி ஏற்படாது," என்றார். வேளாண் உதவி இயக்குனர் (பொ) ராஜாமணி, வேளாண் அலுவலர் கிருஷ்ணமூர்த்தி, வேளாண் உதவி அலுவலர் ரங்கராஜ் மற்றும முன்னோடி விவசாயிகள் உடனிருந்தனர்.

**செம்மை நெல் சாகுபடிகடைபிடிக்கவேண்டிய பணிகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 18,2010,02:04 IST

கொட்டாம்பட்டி:கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் செம்மை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் மேற்கொள்ளவேண்டிய பணிகள் குறித்து, வேளாண்மை உதவி இயக்குனர் செல்வபாண்டி கூறியதாவது:ஒரு ஏக்கர் நெல் நடவு செய்ய தரமான வீரிய ஒட்டு ரக ஒரு சென்ட் நாற்றங்கால் தேவை. பாலித்தீன் விரிப்புகளைப் பரப்பி மரச் சட்டங்கள் வைத்து அதில், மண் மற்றும் தொழு உரங்களை நிரப்பி 3 கிலோ விதைகளை விதைக்கவேண்டும். நீர்ப்பாசனம் 2.5செ.மீ.,க்கு மிகாமல் பாய்ச்சவேண்டும். நடவு செய்த 10ஆம் நாள் முதல் 10 நாட்களுக்கு ஒருமுறை நான்கு தடவை கோனோவீடர் என்ற களையெடுக்கும் கருவியைக் கொண்டு களையெடுக்கவேண்டும். இலை வண்ண அட்டையைப் பயன்படுத்தி தழைச் சத்தினை மேலுரமாக இடவேண்டும். இம்முறையில் குறைந்த செலவில் அதிக மகசூல் பெறலாம். மேலும் விவரங்கள் அறிய தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரையோ, கொட்டாம்பட்டி மற்றும் தும்பைபட்டி வேளாண்மை விரிவாக்க மையங்களையோ தொடர்பு கொள்ளலாம், என்றார்.

**தோட்டக்கலைத்துறை திட்டங்களுக்கு ரூ.412.74 லட்சம் நிதி ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2010,00:26 IST

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்ட தோட்டக்கலை திட்டங்களுக்காக தமிழக அரசு இந்தாண்டு 412.74 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் தெரிவித்தார்.விளாத்திகுளம் அருகேயுள்ள இடைச்சியூரணியில் விடியல் டிரஸ்ட் சார்பில் தோட்டக்கலைச்செடிகள் விநியோக விழா நடந்தது. விடியல் டிரஸ்ட் நிறுவன திட்ட மேலாளர் குமாரவேல் வரவேற்றார். விளாத்திகுளம் தாலுகா தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜாமுகமது முன்னிலை வகித்தார். தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் சையது அகமது மிராஞ்சி, ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் ஒட்டுப்புளியங்கன்றுகளை 40 விவசாயிகளுக்கு வழங்கி பேசினார். அப்போது அவர் பேசும்போது, தமிழக அரசின் தோட்டக்கலைத்துறை தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் தேவைகளை உணர்ந்தும், தோட்டக்கலைப்பயிர்களின் முக்கியத்துவம் கருதியும் தோட்டக்கலை அபிவிருத்தி திட்டங்களுக்காக கடந்த இருபது ஆண்டுகளாக இல்லாத அளவிற்கு நடப்பு நிதியாண்டில் ரூ.412.74 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்திற்காக 16.30 லட்ச ரூபாயும், துல்லிய பண்ணையம் மற்றும் உயர் தொழில் நுட்பங்கள் மூலம் உற்பத்தி அதிகரிப்பு திட்டம் உள்ளிட்ட தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்திற்கு 184.90 லட்ச ரூபாயும், சொட்டுநீர் பாசன திட்டத்திற்காக 163.20 லட்ச ரூபாயும், தமிழ்நாடு நீர்வள-நிலவள திட்டத்திற்காக 48.335 லட்ச ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் சுமார் 1880 ஹெக்டேர் பரப்பில் கூடுதலாக தோட்டக்கலைபயிர்கள் சாகுபடியும், 3 ஆயிரம் விவசாயிகளும் பயன் பெறுவர். விவசாயிகள் தங்களது விளைபொருட்களை தரம் பிரித்து நேரடியாக விற்பனை செய்து அதிக வருமானம் பெறவேண்டும். தோட்டக்கலை மானியத் திட்டங்களை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்தி பலன் பெறவேண்டும் என்றும் கூறினார். விழாவில் வாதலக்கரை பஞ்., தலைவர் இருளாண்டி, முனியசாமி, சந்தனமாரியப்பன், பரமசிவம், காசி, சுப்பையா, சரவணன், திருமால் போன்ற முன்னோடி விவசாயிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் பால்ராஜ், விடியல் டிரஸ்ட் களப்பணி அலுவலர் முருகேசன் ஆகியோர் செய்திருந்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## விலை வீழ்ச்சியை தடுக்க தேங்காயை அரசே கொள்முதல் செய்யவேண்டும் கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் கோரிக்கை

கருமத்தம்பட்டி, அக்.19–
தேங்காய் விலை வீழ்ச்சியை தடுக்க தமிழக அரசே தேங்காயை கொள்முதல் செய்யவேண்டும் என்று துணை முதல்–அமைச்சரிடம் கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ஏ.கே.சண்முகம் கோரிக்கை மனு அளித்துள்ளார்.
கோரிக்கை மனு
கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ஏ.கே.சண்முகம் துணை முதல்–அமைச்சரிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்துள்ளார்.
அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது:–
விவசாய தொழில் பாதிப்பு
விவசாயிகளுக்கு மின் மோட்டார் வழங்கும் திட்டத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் அவரவர் தேவைக்கு ஏற்ப மோட்டார்களை எந்த நிபந்தனைகளும் இல்லாமல் வழங்க வேண்டும். புதிய மின் மோட்டார் வழங்கும்போது பழைய மோட்டாரை திரும்ப பெறாமல், அதை ஸ்பேர் மோட்டாராக பயன்படுத்திக்கொள்ள ஆவண செய்யவேண்டும்.
தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் விவசாய கூலித்தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்கு செல்வதால் விவசாய பணிக்கு ஆட்கள் வருவதில்லை. இதனால் விவசாய தொழில் மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே இத்திட்டத்தை விவசாய பணிக்கு மாற்றம் செய்யவேண்டும்.
அரசு கொள்முதல்
தேங்காய் விலை வீழ்ச்சியை தடுக்க தமிழக அரசே தேங்காயை கிலோ ரூ.20–க்கு கொள்முதல் செய்யவேண்டும். தென்னையை தாக்கும் பல்வேறு நோய்களை கட்டுப்படுத்த வேளாண் பல்கலை கழகத்தின் மூலம் புதிய வகை மருந்துகளை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.
அண்டை மாநிலங்களில் கள்ளுக்கு தடையில்லை. ஆனால் தமிழகத்தில் மட்டும் கள்ளுக்கு தடை உள்ளது. எனவே தென்னை விவசாயிகளின் நலனையும், மக்களின் உடல் நலனையும் கருத்தில் கொண்டு கள்ளுக்கான தடையை நீக்கவேண்டும்.
பால் விலை
கறவை மாடுகளுக்கு கொடுக்கும் தவிடு, புண்ணாக்கு, பருத்திக்கொட்டை போன்ற இடுபொருட்களின் விலை பலமடங்கு உயர்ந்துள்ளது. இதனால் தற்போது உள்ள பாலுக்கான விலை கட்டுபடியாகாததால் பால் உற்பத்தியாளர்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.
இதனால் எருமைப்பால் லிட்டருக்கு ரூ.25–ம், பசும்பால் லிட்டருக்கு ரூ.20–ம் விலை கிடைக்க ஆவண செய்யவேண்டும். புதிய மின் இணைப்பு வேண்டி பதிவு செய்துள்ள அனைத்து விவசாயிகளுக்கும் உடனடியாக புதிய மின் இணைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் அவர் கூறியுள்ளார்.

## நீலகிரி தேயிலை விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அமைச்சர் ராமச்சந்திரன் பேச்சு

ஊட்டி, அக்.19–

நீலகிரி தேயிலை விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கதர் வாரிய துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் கூறினார்.

தேயிலை சுற்றுலா விழா

ஊட்டி மலைப்பகுதி மேம் பாட்டு திட்ட திறந்தவெளி மைதானத்தில் கடந்த 15–ந் தேதி நீலகிரி தேயிலை சுற்றுலா விழா ஜம்பூரி ஊர்வலத்துடன் தொடங்கியது. மேலும் பல் வேறு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ–மாணவி களின் நடன நிகழ்ச்சியும் நடை பெற்றது.

ஊட்டியில் 4 நாட்கள் நடைபெற்ற நீலகிரி தேயிலை சுற்றுலாவின் நிறைவு விழா நேற்று மாலை மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட திறந்த வெளி மைதானத்தில் நடை பெற்றது. விழாவிற்கு கலெக் டர் அர்ச்சனா பட்நாயக் தலைமை தாங்கினார்.

பச்சை தேயிலை

விழாவில் சிறப்பு விருந்தி னராக கலந்து கொண்ட கதர் வாரிய துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசிய தாவது:–

நீலகிரி மாவட்ட பொருளா தாரத்தின் முதுகெலும்பாக விளங்கிய தேயிலைக்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன் கடும் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. தற்போது அந்தநிலை மாறி தேயிலை தூளுக்கு நல்ல விலை கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனது தேயிலை தொழிற் சாலையில் கூட ஒரு கிலோ பச்சை தேயிலைக்கு ரூ.22 வரை விலை வழங்கி உள்ளேன். பெரும்பாலான தேயிலை தொழிற்சாலைகளில் பச்சை தேயிலைக்கு நல்ல விலை வழங்கப்படுகிறது.

தரம்

இந்தநிலை ஏற்படுவதற்கு முக்கிய காரணம் தேயிலை தூளின் தரம். தரமான உற்பத்தி பொருட்களுக்கு உலகம் முழுவதும் நல்ல விலை கிடைக்கிறது. நீலகிரி மாவட் டத்தில் தேயிலை தூளின் தரம் உயர முன்னாள் தேயிலை வாரிய செயல் இயக்குனர் ஆர்.டி.நசீம் எடுத்த முயற்சிகள் தான் காரணம்.

அவரின் முயற்சியால் நீலகிரி மக்களிடம் தரம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது. இதற்காக அவர் கலப்பட தேயிலை தூளை பறிமுதல் செய்து தீயிட்டு எரித்தார். மேலும் சில தேயிலை தொழிற் சாலைகளுக்கு சீல் வைத் தார்.

நடவடிக்கை

தற்போது தேயிலை ஏல மையத்தில் ஒரு கிலோ தேயிலை தூள் ரூ.60–க்கு ஏலம் கோரப்படுகிறது. ஆனால் வெளி சந்தையில் ரூ.110–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் தேயிலை விவசாயி களுக்கு உரிய விலை கிடைப் பது இல்லை.

எனவே தற்போதைய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் இந்த விலை முரண்பாட்டை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது தான் தேயிலை விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும். மேலும் நீலகிரி தேயிலை தூள் விற் பனையை அதிகரிக்க நட வடிக்கை எடுக்க வேண்டும்.

கேபிள் கார், ஹெலிகாப்டர் சேவை

நீலகிரி மாவட்டத்திற்கு ஹெலிகாப்டர் சேவை வேண் டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக நிலுவை யில் உள்ளது. இது குறித்து சம்பந் தப்பட்ட துறை செயலாளரிடம் நேரில் சந்தித்து வலியுறுத்தி உள்ளேன். எனவே நீலகிரிக்கு விரைவில் ஹெலிகாப்டர்

இயக்க நடவடிக்கை எடுக் கப்படும்.
இதே போல் தொட்ட பெட்டா மலை சிகரத்தில் இருந்து படகு இல்லம் வரை கேபிள் கார் அமைப்பது குறித்து ஒரு நிறுவனம் கடந்த 1 மாதத்திற்கு முன்னாள் ஆய்வு செய்தனர். இதன் அறிக்கை 3 மாதத்திற்குள் தயராகி விடும். எனவே நீலகிரி மாவட்டத்தின் சுற்றுலாவை பெருக்க கேபிள் கார் மற்றும் ஹெலிகாப்டர் சேவை ஆகியவை தொடங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று மக்களுக்கு தெரிவித்து கொள்கிறேன்.
இவ்வாறு அமைச்சர் பேசினார்.
பரிசுகள்
பின்னர் நீலகிரி தேயிலை சுற்றுலா விழாவையொட்டி நடைபெற்ற நடன போட்டி களில் மாவட்டத்தில் இருந்து ஏராளமான மாணவ–மாணவி கள் கலந்து கொண்டனர். இதில் ஊட்டி சாந்தி விஜய் பெண்கள் மேல்நிலை பள்ளி மற்றும் காத்தாடி மட்டம் அரசு பள்ளி ஆகிய பள்ளிகள் வெற்றி பெற்றன.
கடந்த 15–ந்தேதி நடைபெற்ற ஜம்பூரி ஊர்வலத்தில் சிறந்த அலங்கார ஊர்திக்கான முதல் பரிசை மகளிர் திட்டம் பெற்றது. 2–வது பரிசு நீலகிரி மலை ரெயில் அலங்கார ஊர்திக்கும், 3–வது பரிசு வனத்துறையும் தட்டி சென் றது. இது தவிர சிறப்பு மற்றும் ஆறுதல் பரிசுகள் வழங்கப் பட்டன.
அனைவரையும் மல்லிகைப்பூ தேயிலை
வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் கா.ராமச்சந்திரன் பரிசுகளை வழங்கினார். விழா வில் தேயிலை வாரியம் சார் பில் வைக்கப்பட்டிருந்த மல்லி கைப்பூ தேயிலை அனை வரையும் கவர்ந்தது. மேலும் தனியார் தேயிலை தொழிற் சாலை சார்பில் ரூ.6 ஆயிரத் திற்கு விற்பனை செய்யப்படும் தேயிலை தூளும் பார்வை யாளர்களை கவர்ந்தது.
விழாவில் தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனர் அம்பலவாணன், நீலகிரி மாவட்ட வருவாய் அலுவலர் குப்புசாமி, குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் சவுந்திர பாண்டியன் மற்றும் தேயிலை வாரிய அதிகாரிகள், சுற்றுலா பயணிகள், தி.மு.க. பிரமுகர்கள் உள்பட ஏராள மானவர்கள் கலந்து கொண் டனர்.

## மஞ்சூர் பகுதியில் பூண்டு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்


மஞ்சூர் பகுதியில் விவசாயிகள் பூண்டு பயிரிட்டுள்ள காட்சி.

மஞ்சூர், அக்.19–
மஞ்சூர் பகுதியில் பூண்டு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகிறார்கள்.

விவசாயிகள் ஆர்வம்

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயத்தை அடுத்து பெரும்பாலான விவ சாயிகள் காய்கறி விவசாயம் செய்து வருகிறார்கள். இதில் மஞ்சூர் பகுதியில் விவசாயிகள் தங்களது நிலங்களில் உருளைக் கிழங்கு, கேரட், முட்டை கோஸ், பீன்ஸ், பட்டாணி போன்றவற்றை பயிரிட்டு உள்ளனர். தற்போது பூண்டு பயிரிடுவதிலும் விவசாயிகள் ஆர்வம் காட்டுகிறார்கள்.

மஞ்சூர் அருகே உள்ள லாரன்ஸ் என்ற இடத்தில் இருக்கும் ஆடா பகுதியில் சுமார் 3 ஏக்கர் பரப்பளவில் வெள்ளை பூண்டு பயிரிடப் பட்டுள்ளது. இந்த பூண்டு செடிகளுக்கு உரமிடப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப் பட்டுள்ளது. இவை இன்னும் சில நாட்களில் அறுவடைக்கு தயாராகி விடும்.

மகிழ்ச்சி

தற்போது பூண்டு ஒரு கிலோ ரூ.200 முதல் ரூ.300 வரை விலை கிடைக்கிறது. இதனால் இதனை பயிரிட்டுள்ள விவ சாயிகள் மகிழ்ச்சி அடைந்துள் ளனர். இது குறித்து விவசாயி குமார் என்பவர் கூறியதா வது:–

வெள்ளை பூண்டு விவசாயம் குறிப்பாக எமரால்டு, எடக்காடு, லாரன்ஸ் பகுதியில் உள்ள மண்ணின் தன்மைக்கு நல்ல விளைச்சலை தரக் கூடியது. இதனால் அந்த பகுதி யில் தற்போது படிப்படியாக வெள்ளை பூண்டு விவசாயத் தில் ஈடுபட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். ஒரு ஏக்கருக்கு 100 கிலோ விதை தேவை படுகிறது. விதை போடப் பட்டு 3 மாதத்துக்குள் அறுவடை செய்து விட லாம்.

நல்ல மகசூல்

100 கிலோ விதை பூண்டு ரூ.20 ஆயிரம் ஆகிறது. உரமிடுதல் போன்ற பணிகளுக்கு ரூ.20 ஆயிரம் வரை ஆகும். தற்போது ஊட்டி பூண்டுக்கு கிலோ ரூ.300 விலை கிடைப்பதால், லாபம் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. இதனால் விவசாயி கள் பூண்டு விவசாயத்தில் ஈடுபட்டால் நல்ல லாபம் கிடைக்கும். அதே நேரத்தில் இயற்கையாக தேவையான அளவு மழை கிடைத்தால் தான் நல்ல மகூகல் மற்றும் லாபத்தை பெற முடியும்.இவ்வாறு அவர் கூறினார்.